Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 22 (05-03-1992) வியாழக்கிழமை ஓசை: 16

## சாரணர் சின்னம் - சிங்கம் புறக்கணிப்பதென முடிவு

தமிழ் மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் புறக்கணித்து வரும் சிறிலங்கா அரசின் சிங்கம் பொறிக்கப்பட்ட சாரணர் சிங்கத்தை புறக்கணிப்பதென சாரணர்கள் உறுதி பூண்டுள்ளனர். கடந்த மாதம் இருபத் தொன்பதாம் திகதி முதல் இம்மாதம் இரண்டாம் திகதிவரை காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தில் நடைபெற்ற சாரணர் சிம் ஜம்போறியிலேயே அவர்கள் இவ்வாறு சபதமெடுத்துக் கொண்டனர். ஆயிரத்திற்கு மேற் (6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மின்வேக பாய்ச்சல்

# மணலாற்றில் 14 படை பலி

### விசேட அதிரடிப் படையணி சாதனை

(மணலாறு)

மணலாறு - மண்கிண்டி இராணுவ முகாம் தொடர் காவலரண்கள் மீது புலிகளின் விசேட அதிரடிப்படை அணி மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றை நடத்தியது. இத் தாக்குதலில் 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். மூன்று காவலரண்கள் அழிக்கப்பட்டன. பெருமளவு நவீன ஆயுதங்கள் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச் சாவை தழுவிக் கொண்டார்.

விடுதலைப்புலிகளின் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட இவ் மின்னல் வேகத் தாக்குதல் பற்றி மேலும் தெரிய வருவதாவது; நேற்று முன் தினம் இரவு 9 - 20 மணிக்கு மண்கிண்டி இராணுவ முகாமிற்கு 500 யார் தொலைவில் உள்ள காவலரண்கள் மீதே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மணலாறு மாவட்டம் மண்கிண்டியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்கள் மீது நேற்று நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம்வருமாறு;

★ ஏ.கே.எல்.எம்.ஜி - 01
★ அதற்குரிய மகசீன் - 01
★ டொங்கான் - 01
★ ஷெல் - 10
★ ரி-56-2 ரக துப்பாக்கி - 02
★ ரி-56-1 ரக துப்பாக்கி - 03
★ ரி - 56 புதிய ரக துப்பாக்கி - 04
★ ரி-56 ரக துப்பாக்கி - 01
★ ரி-81 ரக துப்பாக்கி - 01
★ 303 துப்பாக்கி - 01
★ ஜே ஆர் கைக்குண்டு - 17
★ பரா லைற் - 03
★ ஏ கே.எல்.எம்.ஜி ரவைகள் - 900
★ ஏ. கே மகசின் - 37
★ 303 ரவை - 10
★ நடுத்தரரவைகள் - 11000
★ ஏ. கே. கோல்சர் - 10
★ ஏ.கே.எல்.எம் ஜி கோல்சர் - 01
★ கெல்மட் - 0[illegible]
★ தண்ணீர்க் கான் - 09
★ டெல்ற் - 10
★ ரவை கோல்சர் - 10
★ கிளைமோர் வெடிக்க வைக்கும் சாதனம் - 03
★ வயர் றோல் - 01

## மேஜர் சதாத் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மண்கிண்டியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவமுகாம் காவலரண் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் சதாத் அல்லது வீமன் (அமிர்தநாதன் அருளப்பு - அடம்பன் மன்னார்) என்ற வீரவேங்கை வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவருக்குதமிழீழவிடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

மேஜர் சதாத் இந்திய இராணுவத்துடனான பல மோதல்களில் பங்கு பற்றியவர், குறிப்பாக மணலாற்றில் இடம் (6 ஆம் பக்கம் பார்க்க)



## சிறிலங்கா இராணுவத்தில் ஆள் பற்றாக்குறையாம்

சிறிலங்கா இராணுவத்தில் இராணுவ வீரர்கள் பற்றாக் குறைநிலவுவதாக தெரிவிக்கப் படுகிறது.

இராணுவம் புலிகளின் முகாம்களைக் கைப்பற்றினாலுங்கூட படையினர் பற்றாக் குறையினால் படைகளைக் கைப்பற்றிய முகாம்களில் வைத்திருப்பதோ அல்லது புலிகளிடமிருந்து முகாம்களை பாதுகாப்பதோ சாத்தியம் இல்லை என்று இராணுவ (6 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடிகள் அகற்றப்பட்டன

### சனியன்று துறைமுகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை - சேந்தாங்குளம் வீதியிலிருந்த கண்ணி வெடிகளை அகற்றும் வேலைகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. எதிர்வரும் சனி கிழமை காங்கேசன்துறை துறைமுகம் திறக்கப்பட இருக்கின்றது.

காங்கேசன்துறை துறைமுகமூடாக குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய (6 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது ஹெலி சூடு; குடும்பஸ்தர் படுகாயம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள் மீது 'ஹெலி' சுட்டதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்றது.

இரத்தினம் தியாகராசா (வயது33) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நள்ளிரவு எறிகணை வீச்சிற்கு ஒரே குடும்பத்தில் ஐவர் பலி

நள்ளிரவுவேளை சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். இருவர் படுகாயமடைந்ததுடன் பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.15 மணியளவில் தீவகப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அராலிப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இவ்வாறு ஏவப்பட்ட எறிகணைகள் பொன் (6 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் படை பின்வாங்கியது

# போர்த்திட்டம் தோல்வியில் முடிந்தது

[வவுனியா]

வவுனியாவில் கடந்த ஒரு வாரமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவம் நடவடிக்கையைக் கைவிட்டு பின்வாங்கியுள்ளது. இதற்கு புலிகளின் புதிய தந்திரோபாய நடவடிக்கைகளே காரணம் எனத் தெரியவருகிறது.

கடந்தவாரம் நடைபெற்ற இந்த இராணுவ நடவடிக்கையின் போது பல்லாயிரக்கணக்கான படையினர் சீனத்தயாரிப்பு டாங்கிகள், கனரக வாகனங்கள் சகிதம் மூன்று முனைகளில் முன்னேற முயன்றனர்.

கண்மூடித் தனமான விமானக் குண்டு வீச்சுகளும் எறிகணைத் தாக்குதலும் சிறிலங்கா படையினரால் மேற் கொள்ளப்பட்டன.

படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் எல்லா முனைகளிலும் கடும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

புலிகளின் புதிய தந்திரோபாய நடவடிக்கைகளால் இராணுவம் தான் எதிர் (6 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் அமுல்செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை ஐந்து மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### குழந்தைகள் வைத்தியம்

திவக பாக்கியம் குழந்தைகள்- சிகிச்சை நிலையம் - K. K. S. வீதி மனோகராச் சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1- மைல் தொலைவிலுள்ளஇருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது.
(2246)

### மீன் தூள் விற்பனை

கோழித்தின் மற்றும் கால்நடை உணவுகளுக்கு சேர்க்கப்படும் புரதச்சத்து நிறைந்த மீன் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(3962)

### A/L இரசாயனம்

A/L 93 பொது இரசாயனம் ஆரம்பம். 5. 3. 92 வியாழன் 4. 15 P.M. ஆசிரியர் சத்தீஸ். 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (2260)

## முருகைக்கல் அகழ்வதற்கு தடை

(கொழும்பு)

இலங்கைக் கடற்கரையோரங்களில் முருகைக்கற்களை அகழ்ந்தெடுப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
மண்ணரிப்பினை கட்டுப்படுத்துவதற்காகவே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பதினைந்து ஆண்டுகளாக செயலிழந்த பதிவாளர் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 24ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று யாழ் செயலகத்தில் வலி.வடக்கு பதிவாளர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற பதிவாளர்களின் கூட்டத்தில் நடப்பாண்டுக்கான நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருநாள் இடம் பெறாது

(குருநகர்)

தவக்காலம்தொடங்கிமுதல் வரும் ஞாயிற்றுக்கிழமைவருடம்தோறும் நடைபெறுகின்ற சிறுத்தீவுபுனிதலூர்த்து அன்னைஆலயவருடாந்த திருநாள் இம்முறை நடைபெறமாட்டாதென பங்குத்தந்தை வண. டீ. எம். இம்மனுவேல் அடிகள் தெரிவிக்கிறார்.

இராணுவ நடவடிக்கைகள் குடாநாட்டில் ஆரம்பித்ததை அடுத்து திருநாட்கள் கொண்டாடப் படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆலயங்களில் சிறுத்தீவு லூர்த்து அன்னைஆலயமும்ஒன்றாகும்.
(21)

## திருமறைக் கலா மன்றம் கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். திருமறைக் கலா மன்றம் நாளை 6 - ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பிரதான வீதி அரங்க டீ.ஸ்போர் கூடத்தில் "கத்தோலிக்க நாட்டுக் கூத்து, கிராமியப் பாடல்களில் இலக்கண மதிப்பீடு" என்னும் கருத்தரங்கு ஒன்றை நடத்த உள்ளது.

ஆசிரியர் திரு எ. ம. யோசெப் தலைமையில் பிரபல கவிஞர் பாசையூர் தேவதாசன் கருத்துரை வழங்குவார். (21)

---

சன்மார்க்க சபை - குரும்பசிட்டி

## குரும்பசிட்டி மக்களுக்கு இலவச பால்மா விநியோகம்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி (J/242) குரும்பசிட்டிகிழக்கு (J/243) கிராம சேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 1-3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கிய நிதியில் இலவசமாக பால்மா வகைகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியானவர்கள் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் பிற்பகல் 2-5 மணிவரை மயிலணி ஒழுங்கை சுன்னாகத்தில் உள்ள சபையின் தற்காலிக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

(2262)

---

## அச்சக வேலையாட்கள் தேவை

அச்சுக்கோர்த்தல்
ஒப்புநோக்குதல்
புத்தகம் கட்டுதல்

போன்ற வேலைகளில் நன்கு அனுபவமுள்ளோர் 05-03-92 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில் ஈழநாதம் காரியாலயத்தில் நேரில் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்.
(2261)

---

## 90ஆம்நாள் நினைவஞ்சலி



வடமராட்சி தாக்குதல் பிரிவு
தளபதி

### மேஜர் இளங்கோ

(வல்லிபுரம் மன்மதனாதன்)
(கப்பூதுர்)

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 13.04.1971 | 07.12.1991 |

குட்டிப் புலியாக வீரப்புலிப் பாசறையில் வீரமுடன்
சேர்ந்த மன்மதா!
மண்மீட்புப் போரினிலே மில்லர் நடத்தியதாக்குதலில்
மண்டான் இராணுவத்தை வழி மறித்துப் போர்செய்து
உன் போரை ஆரம்பித்தாய்
மன்மதா!
களங்கள் பல கண்டாய்
கண்ட கதை அவர்களுக்குச் சொல்ல ஓடி வந்து
சென்றாய்
ஆனால் வளலாயில் வழிமறித்து அடித்த கதைசொல்ல
ஏன் ஓடிவரவில்லை?
வருவாய் காத்திருக்கின்றோம்
உன் புன்சிரிப்பு முகத்தைப் பார்ப்பதற்கு
உன் வீரக்கதை கேட்பதற்கு
மன்மதா!

05.03.1992 (இன்று) இவரதுஇல்லத்தில்அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறவிருப்பதால் சகபோராளிகளையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

முரளிவீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.

இப்படிக்கு
குடும்பத்தினர், போராளிகள்

(சி-4004)

---

## உற்பத்தி பெருகிட...

உங்கள் வீட்டு மாமரங்கள் பூக்க ஆரம்பிக்கின்றன அல்லவா? இவை நன்றாகக் காய்த்து, உயர் விளைவைத் தரவேண்டும் என்று தானே விரும்புகின்றீர்கள்? எமது விருப்பமும் அதுதான். ஆயினும், 'மாவிலைத் தத்தியால்' மாமரம் தாக்கப்பட்டு விளைவு குறைவடைகிறது என நீங்கள் மனம் வெதும்புவது எமக்குப் புரிகிறது. உங்கள் துயர் போக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் தயாராய் உள்ளது.

விபரங்களுக்கு:

### தமிழீழ ஆய்வு நிறுவனம்

தாவடி. (சி/4001)

---

## 5ஆம்ஆண்டுநினைவஞ்சலி



தொண்டமனாற்றில் வீரசாவெய்திய

### வீரவேங்கை கமல்

(கபிரியேற்பிள்ளை கிறிஸ்துராசா)

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 13-11-1966 | 05-03-1987 |

கண்விழித்துக் காவல் நின்று
பிறந்த மண்ணுக்கே வித்தானாய்
வீரத்திற்கு விளைநிலமாகி
வீரவேங்கையானாய்

(சி-4002) -- குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-05

1986 ஆம் ஆண்டு இதே தினத்தின் மன்னார் / அடம்பன், கன்னாட்டிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**சுதாகர்** [சுப்பிரமணியன் - பம்பைமடு, வவுனியா,]

இதே சம்பவத்தில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு தொண்டமானாற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த

**நிருபன்** [வெற்றிவேல்பிள்ளை இதயவேல்
சாஸ்திரிவேளாங்குளம், வவுனியா.]

**கமல்** [கபிரியேல் பிள்ளை கிறீஸ்துராசா
பருத்தித்துறை முனை.]

1988 ஆம் ஆண்டு மொறவெவப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு குமுழமுனையில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். சூரன்** [அருணாசலம் சுரேந்திரராசா
புதுக்குடியிருப்பு,]

கண்டிக்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**நிசாந்தன்** [யோகரத்தினம் பிரதாபன்
-தெணியம்பை, வல்வெட்டித்துறை]

நவாலியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/3998)

# தமிழகத்தில் "தடா" சட்டப்பிரயோகம்; தேவையற்ற, கண்டிக்கத்தக்க செயல்

## தமிழக வழக்கறிஞர் சங்கத் தலைவர் கண்டனம்

"ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கும், இந்தியாவிற்கும் தொடர்பு ஏற்பட்டுப் பலவருடங்களாகின்றன. இந்தநிலையில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டு விட்டார் என்ற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு தமிழகம் பயங்கரவாதத்தால் சூழப்பட்டு, பயங்கரவாதத்தில் சிக்கித் தவிக்கிறது என்று சொல்ல முடியாது.''

இவ்வாறு தமிழக வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் காந்தி 'தடா' சட்டம்குறித்து இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் பேசும் போது குறிப்பிட்டார். இக்கருத்தரங்கில் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியை நாகபூஷணம், வழக்கறிஞர் சந்துரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேசிய காந்தி; 'தடா'ச் சட்டம் கொண்டு வருமளவிற்கு மோசமான நிலையில் தமிழகம் இல்லை. எப்போதுமே தமிழகம் அமைதியான மாநிலமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

கடந்த காலத்தில் தமிழக அரசாங்கங்கள் தமிழ்ப் போராளிகளுக்கு அளித்த ஆதரவும் நட்புணர்வும் ஈழத் தமிழர்களுக்கு உதவுவது பெருமை, இது தான் 'தமிழுணர்வு' என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்தியிருக்க ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பிறகு ஒரே இரவில்நிலைமை தலை கீழாக மாறிவிட்டது.

பலர் போராளிகளுடனான, அவர்களது பழைய நட்பையும் போராளிகளுக்குஅவர்கள் செய்த பழைய உதவிகளையும் சொல்ல முடியாத சூழல் ஏற்பட்டுவிட்டது.

பல அரசியல் கட்சிகளும், அரசாங்கங்களுமே வெளிப்படையாக போராளிகளை ஆதரித்த கடந்த காலத்தில் பொதுமக்களில் பலரும் அவர்களை ஆதரித்தார்கள். அப்போது அவர்கள் போராளிகளுக்கு ஆதரவு அளித்தார்கள் என்ற ஒரே காரணத்தால் அவர்கள் தீவிரவாதத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது.

தமிழகத்தின் தற்போதைய சூழ்நிலையும் சட்டம், ஒழுங்கையும் பாதுகாக்க, ஏற்கனவே இங்கு நடைமுறையிலிருக்கும் சட்டங்களே போதும். நமது மாநிலத்தைப் பொறுத்த வரை 'தடா' என்பதும் ஒரு தீர்வே அல்ல. பொதுமக்களின் பாதுகாப்புக்கும் இயல்பானவாழ்க்கைக்கும் தினந்தோறும் அபாயங்கள் ஏற்படுகிற மோசமான சூழலில்தான் தடா தேவை. அப்படி மோசமான சூழல் இருக்கும் இடங்கள் என்று தமிழகத்தில் எந்த இடத்தையும் அரசு அடையாளம்காணவில்லை. அப்படியிருக்க 'தடா' என்ற மிக அதிகமான அதிகாரம் இன்றைய நிலையில் தமிழகத்திற்குத் தேவையே இல்லை.

அதுவும் வழக்கறிஞர்களைப் பயமுறுத்தும் நோக்கத்தில் தடாவை பயன்படுத்துவது மிகவும் கண்டிக்கத் தக்க செயல். ஒரு வழக்கறிஞர் என்பவர் அடிப்படையில் நீதிமன்றத்தின் ஊழியர். அவரிடம் வரும் மக்களுக்காக வாதாட வேண்டிய உரிமையும் கடமையும் அவருக்கு உண்டு.

வழக்குக்காக வருபவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் குற்றம் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தாலும் அவர்களுக்காக வாதாடுகிற உரிமை வழக்கறிஞருக்கு இருக்கிறது. இந்த உரிமையை பறிக்கிற அதிகாரம் யாருக்கும் கிடையாது. இந்த உரிமையைச் செயல்படுத்துகிற ஒரு வழக்கறிஞரை யாரும் மிரட்ட முடியாது சரியான ஆதாரங்களோ, நேரடித் தொடர்போ அடிப்படையோ இல்லாமல் ஒரு வழக்கறிஞரைக் கைது செய்ய முடியாது என்று வழக்கறிஞர் காந்தி குறிப்பிட்டார்.

### நாகபூஷணம்

பேராசிரியை நாகபூஷணம் கருத்துத் தெரிவிக்கும்போது 'பெரிய அளவில் தீவிரவாதம் சமுதாயத்தை ஊடுருவும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் தடா. அந்தச் சூழலில் பயன்படுத்துவது நியாயம். ஆனால் அத்தகைய சூழல் தமிழகத்தில் இப்போது நிலவவில்லை. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் அதைப்பயன்படுத்துவது சமுதாயத்திற்கு நல்லதல்ல. அப்படிப் பயன்படுத்தினால் அது அதைப்பயன்படுத்தும் அதிகாரிகளின் சமூகப் பொறுப்பின்மையைத் தான் காட்டும் என்று குறிப்பிட்டார்,

### சந்துரு

வழக்கறிஞர் சந்துரு கருத்துத் தெரிவிக்கும் போது- 1919 இல் பிரித்தானியர்கள் ரௌலட் சட்டத்தைகொண்டு வந்தபோது, மகாத்மாகாந்தி சத்தியாக்கிரகம் செய்தார். நாடு முழுவதும் கொந்தளித்து அதை எதிர்த்தது அந்த ரௌலட் சட்டத்தை விடவும் கடுமையான அதைவிடவும் அதிகமான அதிகாரங்களை அரசாங்கத்துக்குத் தருகிற சட்டம் 'தடா'.

ரௌலட் சட்டம் கூட, அதன் செயற்பாட்டால்தான் மக்களைப் பயமுறுத்தியது. ஆனால், தனது இருப்பாலேயே மருட்டக் கூடிய சட்டம் தடா. மிகவும் எளிதான வகையில் இதைச் சொல்வதானால் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம், அரசாங்கத்தின் பயங்கரவாதத்தை (State terrorism) அதிகரிக்கும் அபாயந்தான் மக்களைத் 'தற்சமயம் மிரட்டிக் கொண்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

தடாசட்டம் பற்றிய நுணுக்கங்கள் பற்றியும் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்,

இந்தியாவின் சாதாரண கிரிமினல் சட்டங்களிலிருந்து, தடா பல விதங்களில் வேறுபடுகிறது இந்திய குற்றவியல் சட்டத்தின் படி, ஒரு மனிதரைக் குற்றவாளி என்று பொலிசார் கைது செய்தால், அவர் குற்றவாளிதான் என்று பொலிசார் நிருபிக்கும் வரையில் சட்டம் அவரை நிரபராதியாகத்தான் பார்க்கும். ஆனால் தடாவின் கீழ் ஒரு மனிதரைத் தீவிரவாதி என்று பொலிசார் கைது செய்தால், கைதாகி விட்ட ஒரே காரணத்தால் சட்டம் அவரைத் தீவிரவாதியாகப் பார்க்கும்.

குற்றம் சாட்டப்பட்டு நிற்பவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகள் தான் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden of proof) அரசாங்கத்துடையது ஆனால் தடாவின் கீழ், பொறுப்பு பொலிசாரிடம் இல்லை.

குற்றம் சுமத்தப்பட்டு நிற்பவர்கள்தான் 'நாங்கள் நிரபராதிகளே' என்று நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்.

இந்திய குற்றவியல் சட்டத்தில், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பொலிசாரிடம் கொடுக்கும் எந்த வாக்கு மூலமும் செல்லும். அது மட்டுமல்ல, அந்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் வேறு சிலரைக் கூட 'பயங்கரவாதிகள்' என்று கைது செய்ய முடியும்.

சாதாரண வழக்குகள் சில சந்தர்ப்பங்களை தவிர்த்து மக்கள் முன்னிலையில் நடக்கும். ஆனால் தடாவின் படி வழக்குகள் மூடப்பட்ட நீதிமன்றத்தில்தான் நடக்கும்.

சராசரியான கிரிமினல் வழக்குகள் நடக்கும் நீதிமன்றங்களில் தடா வழக்குகள் நடக்காது இதற்கென்று நியமிக்கப்படும் நீதிமன்றங்களில், தனியான நடைமுறையோடு அந்த வழக்குகள் நடக்கும்.

இன்னொரு முக்கியமான அம்சம் இந்த நீதிமன்றங்களுக்கான நீதிபதியை நியமிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் இல்லை. மாறாக, அரசாங்கத்திட இருக்கிறது.

சாதாரணமாக கிரிமினல் வழக்குகளில் அப்பீல் செய்ய நினைப்பவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு வரலாம். ஆனால் தடா வழக்குகளில் உயர் நீதிமன்றத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது அப்பீல் செய்ய வேண்டுமானால் டில்லி சுப்ரீம் கோர்ட்டுக்குத் தான் போக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தடாவால் ஏற்பட்டுள்ள விளைவுகளில் பாதகமான நிலையே காணப்படுகின்றது என்றும் "அதிகாரத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே இருக்கும் அதிகாரங்களையே துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் எது செய்தாலும் தட்டிக் கேட்க முடியாதபடி அவர்கள் யாரைக் கைது செய்தாலும் கேள்வி கேட்க முடியாதபடி மிகப் பெரிய அளவில் அவர்களிடம் அதிகாரத்தைக் கொடுப்பது ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்த்து விடும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

தமிழகத்தில் 'மினி' அவசர கால நிலை என வர்ணிக்கப்படும் 'தடா' சட்ட அமுலாக்கம் தொடர்பாக சென்னைப் பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியை நாகபூஷணம், வழக்கறிஞர் சங்கத் தலைவர் காந்தி மற்றும் வழக்கறிஞர் சந்துரு ஆகியோர் கூறிய கருத்துக்களின் தொகுப்பு இது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் *Terrorist and Disruptive Activities (Prevention Act) (TADA)* கீழ் முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன், வழக்கறிஞர் வீரசேகரன் உட்பட மற்றும் பலஅரசியல்வாதிகள், தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

நன்றி: ஜூனியர் போஸ்ட்

---

# பேச்சுவார்த்தை மூலமே அமைதி; உலக நாடுகள் ஏற்க வேண்டும்

## — தமிழக ஆளுநர் பீஷ்மநாராயணசிங்

(சென்னை)

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதன் மூலமே அமைதி காண முடியும் என்பதையும் யுத்தத்தினால்எந்தப் பிரச்சினையையும்தீர்க்க முடியாது என்பதையும்உலகநாடுகள் ஏற்றுக் கொண்டிருப்பதாக தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் கருத்துதெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற உலக அமைதி பற்றிய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்.

அணுவாயுதம் மற்றும்நவீன ஆயுத தளபாடங்களுடன் கூடிய பாதுகாப்பு படையை உருவாக்க மிகப்பெரிய அளவில் நிதி செலவிடப்படுகின்றது. இருந்தாலும் அவை மூலம் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. சமாதானம் ஒன்றே அமைதிக்கு சிறந்த வழி. எனவே உலகநாடுகள் கடுமையான வார்த்தைகளைத் தவிர்த்து சமாதான வழிகளை நாடவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இக்கருத்தரங்கில் ஜேர்மன், பிரிட்டன், இலங்கை, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவரகப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# சுரங்க வெடி விபத்தில் 54 பேர் பலி; 57 பேர் காயம்

(அங்காரா)

வடக்கு துருக்கியில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம் பெற்ற காஸ் வெடிப்பு விபத்தொன்றில் 54 சுரங்கத் தொழிலாளர்கள் உயிர் இழந்துள்ளதாக அங்காராவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

485 மீற்றர் ஆழத்திற்கு அடியே ஒரு சுரங்கத்தில் இருநூற்றுக்கும் அதிகமான சுரங்கத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில் நேற்று முன்தினமிரவு இந்த விபத்து ஏற்பட்டதாக அங்காரா உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகமென்றும், 57 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், உதவிப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிறீநகரில் டாக்டர் கடத்தல்

(டில்லி)

ஜம்மு- காஷ்மீர் மாநிலத் தலைதகர் சிறீநகரில் ஓர் காஷ்மீர் மருத்துவ விஞ்ஞான கழகத்தின் தலைவர் டைரக்டர் டாக்டர் சாகூர் அகமட் நேற்று முன்தினம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

தென்னிந்திய திருச்சபை
யாழ். அத்தியட்சாதினம்
சிறுகைத் தொழில் நிலையம்
பண்டத்தரிப்பு
★ தையல் ★ கைப்பணி ★ மனையியல்
★ தும்புவேலை ★ பன்னவேலை
இலவச வகுப்புகள்
ஆரம்பம்: 22. 03. 92 காலை 9 மணி
பயிற்சிக் காலம்: 6 மாதம்
விண்ணப்ப முடிவு திகதி: 20. 03. 92
விண்ணப்பப் படிவங்களை பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ., குருமனை ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம்.
ஊழியர்
[சி/3999] குருமனை, பண்டத்தரிப்பு

கண்ணீர் அஞ்சலி
திரு. க. கந்தசாமி
யாழ்ப்பாண மத்திய கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் திரு. க. கந்தசாமி அவர்களுடைய மரணச் செய்தி கேட்டு ஆறாத் துயரடைந்தோம். அன்னாரின் பிரிவுத் துயரில் நாம் இணைந்து கொள்வதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
இங்ஙனம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
[சி/4003]

# தியாகச் சுடர் அன்னை பூபதி

(நேற்றைய தொடர்ச்சி)

### அன்னையர் முன்னணியில் அங்கத்துவம்

இந் நிலையில் ...... மாதர் சங்கத்திலும், ஆயர் சங்கத்திலும் அங்கத்தவராயிருந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அன்னை பூபதிக்கு நாவற்கேணியில் அன்னையர் முன்னணியின் தொடர்பு கிடைத்தது.

அமைதி காக்கவென்று எமது தாயகம் வந்து, எம் மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கிய காலம். அன்னையர் முன்னணியில் இணைந்து கொண்டதன் மூலம் தனது போராட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்க முடியும் எனக்கருதிய அன்னை பூபதி 1987 இன் இறுதிப் பகுதியில் அன்னையர் முன்னணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இந்திய அமைதிப்படை வரவின் பின் இந்திய இராணுவம் கொன்று குவித்த அப்பாவி மக்கள் ஏராளம், ஏராளம். இடித்துக் கொட்டிய வீடுகள், நொருக்கித் தள்ளிய கோயில்கள், உடைத்தெறிந்த தேவாலயங்கள், தரைமட்டமாக்கிய மசூதிகள் எண்ணற்றவை. இந்திய இராணுவத்தின் போக்கிரித்தனத்தை, போர்க் கொடுமைகளை நிறுத்துமாறு இந்திய இராணுவ முகாம் நோக்கி அன்னையர் முன்னணி நடத்திய கண்டன ஊர்வலங்கள் அத்தனையிலும் அன்னை பூபதி அவர்கள் பங்கு கொண்டார்.

அத்தோடு இராணுவத்தின் அடாவடித்தனத்தை நிறுத்துமாறு எத்தனையோ தடவைகள் இந்திய இராணுவ முகாம் சென்று கோரிக்கை விடுத்தனர் அன்னையர் முன்னணியினர்.

கோரிக்கைகள், கண்டன ஊர்வலங்கள் பயனற்றுப் போயின.

### உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டிய உண்ணா நோன்பு

கோரிக்கைகள் பயனற்றுப் போக அடுத்த கட்ட போராட்ட நடவடிக்கைக்கு அன்னையர் முன்னணி திட்டம் வகுத்தது.

உலகிலேயே முதற்தடவையாக உண்ணா நோன்பிருந்து, இனத்தின் விடுதலைக்காக உயிர் துறந்ததன் மூலம் பாரதத்தின் கபடத்தனத்தை உலகிற்கு எடுத்துக் காட்டினான் தியாகி லெப். கேணல் திலீபன். தியாகி திலீபனின் மரணத்தின் மூலம் 'காந்தி தேசம்' 'அகிம்சையின் பிறப்பிடம்' என்ற அழகான முகமூடிகளை அணிந்திருந்த பாரததேசம் சர்வதேச அரங்கில் தனது முகமூடிகளை இழந்து சுயரூபம் காட்டி நின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிரான தனது தாக்குதல்களை தீவிரப்படுத்திய பாரத அரசு விடுதலைப் புலிகளின் பதிலடிகளினால் திணறியது. பல்லாயிரம் இந்தியப் படைவீரர்களை பலி கொடுத்தது. ஆயிரக்கணக்கான யோர்த்தளபாடங்களை விடுதலைப் புலிகளிடம் இழந்து தடுமாறியது.

தனது தோல்வியை வெளி உலகிற்கு அம்பலப்படுத்த விரும்பாத பாரதம் விடுதலைப் புலிகளுக்கு மக்களாதரவு கிடையாது. அவர்கள் மக்ளிடமிருந்து அந்நியமானவர்கள் என்ற பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இந்த நிலையில்தான் ...

அன்னையர் முன்னணியும் ஏனைய பொது அமைப்புக்களும் இணைந்தன

1. தமிழ் மக்கள் மீதான அதர்ம யுத்தத்தை நிறுத்து.
2. புலிகளுடன் நிபந்தனை இன்றிப் பேச்சுவார்த்தை நடத்து.

என்ற கோரிக்கைகளுடன், கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை சுழற்சி முறை உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர். ஆனால் இந்திய அராஜகத்திற்கு முன்பு இச் சுழற்சி முறை உண்ணா நோன்பு தோற்றுப்போக, கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொள்வதென தீர்மானித்தனர்.



இதன் மூலம் எமது நியாயமான விடுதலைப் போராட்டத்தையும், அமைதிப்படையினரால் எம் மக்கள் படும் இன்னல்களையும் இந்தியாவிற்கு மட்டுமல்ல, முழு உலகிற்கும் எடுத்துக் காட்ட - கூற இவ்வமைப்புகள் முன் வந்தன.

மக்களே புலிகள் என்ற உண்மையை உலகிற்கு பறைசாற்றியது இந்த உண்ணா நோன்பு.

புலிகளுக்கு மக்கள் ஆதரவு கிடையாது என்று புனைந்துரைத்த இந்தியாவை உலக நாடுகள் எள்ளி நகையாடின. உண்மையை எதிர்கொள்ள முடியாது மூச்சுத் திணறியது இந்தியா.

### அமைதிப்படையின் அடாவடித்தனங்கள்

அன்னையர் முன்னணியினர் சார்பில் உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற அன்னம்மா டேவிட், நேசம்மா வடிவேல் ஆகியோர்.

இதைத் தன்னுடைய தன்மானத்திற்கு விழுந்த அடியாகக் கருதியது பாரதம். எனவே உண்ணா நோன்பினை குழப்பும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டது.

அமைதிப்படையின் ஆசை வார்த்தைகளுக்கும், 'ஒய்வூதியம் தொடர்ந்து கிடைக்காது' என்பன போன்ற சில்லறைப் பயமுறுத்தல்களுக்கும் இணங்கி இவ்விருவரும் உண்ணா நோன்பை இடையிற் கைவிட்டனர், அற்ப ஆசைகளுக்கு முன்னே ஆன்மபலம் பலியிடப்பட்டது.

### அன்னை பூபதியின் இறுதி

சுய நலத்திற்காக உண்ணா நோன்பு இடையில் கைவிடப்பட்டு மக்கள் போராட்டம் கொச்சைப் படுத்தப்பட்ட நிகழ்ச்சியை தனது பெருவெற்றியாக எண்ணிய இந்திய இராணுவம் கெக்கெலி கொட்டியது. எம்மக்களின் அவல நிலையை எண்ணிய அன்னை பூபதி உள்ளம் நொந்தார் .. மக்களுக்காக தன்னையே தியாகம் செய்வேன் என உறுதி பூண்டார் குடும்பம், சுகபோகம் யாவையும் மறந்து உறுதியான உள்ளத்தோடு இவ்விரு கோரிக்கைகளுக்காகவும் உண்ணா நோன்பிருக்க முன் வந்தார். அன்னைபூபதியின் தூய தியாக உணர்ச்சி உலகிற்கு தெரிய வந்தது.

விடுதலைப் போராட்டத்திற்கு தமது தார்மீக ஆதரவைச் செலுத்துபவர்கள், தேசபக்தர்கள் என்று தம்மை இனம்காட்டி தமிழ் மக்கள் எவரும் துணிந்து செயற்பட முடியாத சூழ்நிலை

இந்திய ஆக்கிரமிப்புப் படை நிகழ்த்திய கொடூரங்களால் தாயகபூமிகிட்டத்தட்ட மயானமாய் மாறிவிட்டிருந்த நேரம் ... இந்நிலையில்

19 03.1988 அன்று தனது உயிரைத் துச்சமாக எண்ணி நீராகாரம் கூட அருந்தாத உண்ணா நோன்பை ஆரம்பித்தார் அன்னைபூபதி.

தியாகி திலீபனின் தியாக மரணம் சர்வதேச அரங்கில் பாரதத்திற்கும் தேடித் தந்த அவமானத்தையும், இழிபெயரையும் அன்னை பூபதியின் உண்ணா நோன்பு மேலும் ஸ்திரப்படுத்திவிடுமோ எனப் பயந்தது இந்திய அரசு.

உண்ணா நோன்பைக் குழப்பியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிசெயற்பட்டது.

### அன்னைபூபதி மீது அழுத்தம்

அன்னை குடும்பத்தை நிர்மூலமாக்கிவிடுவோம் என அச்சுறுத்தியது இந்தியப்படை. அன்னைபூபதிக்கு முன்பு உண்ணாவிரதமிருந்து இருவரும் உண்ணாநோன்பைக் கைவிடுவதற்கு தம்முடைய பிள்ளைகளின் வற்புறுத்தலையும் ஒரு காரணமாககாட்டியிருந்தனர்.

தன்னுடைய சொந்தவிருப்பத்தின் பேரில் உண்ணா விரதமிருப்பதாக சத்தியக் கடதாசியில் கையொப்பம் இட்ட பின்பே உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்த அன்னைபூபதி அச்சுறுத்தலுக்கு அசைந்து கொடுக்கவில்லை.

இதனால் ஆத்திரமுற்ற ஆக்கிரமிப்பாளர்கள் உண்ணா விரதம் நடைபெற்றகோயிலை அடிக்கடி முற்றுகையிட்டனர். உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக திரண்டிருந்த மக்களை கலைப்பதற்காக ஆகாயத்தை நோக்கி வெற்று வேட்டுக்களைத் தீர்த்தார்கள் ஆயுதங்களைக் காட்டி மக்களை மிரட்டினார்கள்.

நாட்கள் வாரங்களாயின தம்மீது அழியாக்கறைபடிந்துவிடுமோ என்றெண்ணிய பாரதம் கோரிக்கைகளுக்கான தீர்வை வழங்க முன்வராது மீண்டும் உண்ணாநோன்பைக் குழப்ப எத்தனித்தது.

அன்னைபூபதிக்கு பலவந்தமாக சேலைன் ஏற்றுவோம் என மிரட்டினர். அன்னை உடல்தளர்ந்தாலும் உள்ளத்து உறுதி தளரவில்லை.

(முற்றும்)

---

## சிறுபான்மையர் உரிமையை எவரும் மறுக்க முடியாது

--பிரேமதாசா

(கொழும்பு)

சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்க எவருக்கும் உரிமையில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. பிரேமதாசா மேலும் கூறுகையில், சிலர் சிறுபான்மையினத்திலும், இன்னும் சிலர் பெரும்பான்மையினத்திலும்பிறப்பது உண்மையிலேயே ஒரு விபத்தாகும். சிறுபான்மையினம் என்பதால் அவர்களின் முக்கியத்துவத்தை மறைக்கவோ, மனித உரிமைகளை மறுக்கவோ எவருக்கும் உரிமையில்லை என்பதையும் மிக உறுதியோடு இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன். இதைப் பேச்சில் மட்டுமன்றி செயலிலும் எனது அரசு காட்டி வருகின்றது என்றும் தெரிவித்தார்.

## 'பிரச்சினைக்குத் தீர்வுகாண சந்தர்ப்பம் வந்துவிட்டது'

-எம். எச். எம். அஷ்ரப்

வடக்கு,கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய தருணம் வந்து விட்டதுஎன்று பாராளுமன்றத்தில் பேசிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், உதவி வழங்கும் நிறுவனங்களிலேயே பெரிதும் தங்கியிருக்கும்எமது சிறிய நாடு, தொடர்ந்தும் பாதுகாப்பு செலவினத்திற்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்க முடியாது என்றும் வலியுறுத்தினார்.

### கைதடி ஆயுர்வேத

## ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கஷ்டப்படி கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை ஊழியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட இரு வருடங்களுக்கான கஷ்ட நிவாரணப் படி இன்று வரை வழங்கப்படவில்லையென்று இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் மிகக் கவலையும், மனவேதனையும் தெரிவித்துள்ளனர்.

இப்பணத்தைப் பெறப் பல தடவைகள் கொழும்பு தலைமைச் செயலகத்துடன் நேரிலும், கடித மூலமும் தொடர்புகள் கொண்டும் இப்பணம் இதுவரை கிடைக்கவில்லை.

(24)

## ரஞ்சனுக்கு முத்திரை

(கொழும்பு)

கடந்த வருடம் கொழும்பில் குண்டுவெடிப்புக்குப் பலியான ரஞ்சன் விஜேரட்னாவின் ஞாபகார்த்தமாக முத்திரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரஞ்சன் விஜேரட்னாவின் ஓராண்டு நினைவு தினத்தன்று இந்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் வரும்9ஆம்திகதி நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 16, 17, 18மற்றும் 19ஆம்திகதிகளில் முறையே சப்பரம், தேர், தீர்த்தம், பூங்காவனம்ஆகியவிசேட திருவிழாக்களும் இடம் பெறும் என சட்டநாதர் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

## உறுப்பினர்கள் தெரிவு

வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஆலயத்தின் நலன்கருதி பரிபாலன சபையில் அபிவிருத்திக்குழுவுக்கும் திருவிழாக்குழுவுக்கும் என மேலதிக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக் கூட்டம் தி.ரு.அ.மகாதேவா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை இவ் ஆலயத்தின் மகோற்சவம் எதிர் வரும் 5.4.92அன்று ஆரம்பமாகவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ஊரடங்கு; 200 பயணிகள் முடக்கம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சமார் இருநூறுக்கும் அதிகமானோர் வவுனியாவில்தங்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னி மாவட்டத்தில் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவதால் இவர்கள் தொடர்ந்து பயணம் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும், வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள மண்டபமொன்றில் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

## இந்திய புலமைப் பரிசில் விண்ணப்பத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் புலமைப் பரிசில் பெற்று பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு.எஸ். தொண்டமான் அறிவித்துள்ளார். கூடுதலான மலையக மாணவர்களைஇந்த புலமைப் பரிசில் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காகவே இந்தத் திகதி நீடிப்பு செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி கடந்த மாதம் 28 ஆம் திகதி என்பது தெரிந்ததே.

### அமைய எழுது வினைஞர்

## பரீட்சை வினாத்தாள்கள் திருத்த வேலை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண அமையஎழுதுவினைஞர்போட்டிப் பரீட்சை வினாதாள்கள் திருத்தும் வேலைகள் பூர்த்தியாகி விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஒரே நேரத்தில் கடந்த மாதம் மேற்படி பரீட்சை நடைபெற்றது தெரிந்ததே.

இப் போட்டிப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் மூவாயிரம் பேர் தோற்றினர். இவ் விடைத்தாள்கள் திருத்துவதற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. கடந்த சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் இவ் விடைத்தாள்கள் திருத்தி முடிக்கப்பட்டதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சிந்தனைக்கு

ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக, உபதேசம் செய்யாதே. சொல்வதற்கு ஏதாவது இருக்கும் போது மட்டுமே உபதேசம் செய்

— ரிச்சாட் வேட்லி.


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 05-03-1992.

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208

த. பெ. எண் 05


# நிலைமை புரியாதோரின் லண்டன் மாநாடு

"இலங்கையில் நடைபெறும், யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கைகளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தீர்வு காண்பதற்காகப் பேச்சு நடத்துவதற்கு தயாராக இருப்பதை இருதரப்பினரும் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்த வேண்டும்." இவ்வாறு, கடந்த மாதம் லண்டனில் "சமாதான தீர்வை நோக்கி" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இன்று உலகின் பல பாகங்களிலும் மாநாடுகள், கருத்தரங்குகள், சந்திப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன. இவை தமிழர் தேசிய இனப்பிரச்சினையை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்கு உதவுகின்ற அதே வேளை சிலர், சில அமைப்புக்களின் பெயரால் நடத்தப்படும் மாநாடுகள், கருத்தரங்குகள் என்பன இலங்கையின் உண்மை நிலவரத்திற்கு முரணானவையாக அமைவதும் உண்டு. அவ்வாறானதொரு மாநாடாகவே கடந்த 15 ஆம் திகதி லண்டனில் இடம்பெற்ற மாநாடு அமைந்துள்ளது.

இம் மாநாட்டின் தீர்மானத்தில் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் 1990 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்ததில் இருந்து இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஓர் சுமுகமான சூழ்நிலை - யுத்தநிறுத்தம்- ஏற்பட வேண்டும் எனப் பகிரங்கமாக வற்புறுத்தி வருகின்றனர். அமைச்சர் தொண்டமான் சமரசத்திட்டம் ஒன்றை முன்வைத்து பேச்சுவார்த்தை ஒன்று நடாத்த யாழ்ப்பாணம் வர இருப்பதாக அறிவித்த போதும், பேச்சுக்குரிய சூழ்நிலையை உருவாக்குமாறே புலிகள் அவரிடம் கோரினர்.

இந்நிலையில் யுத்தநிறுத்தத்தையோ அன்றி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவோ விடுதலைப்புலிகளும் சம்மதிக்கவேண்டும் என மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றுவதென்பது பிரச்சினையில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலைப்பாட்டையும். பிரச்சினைக்குரிய பகுதியில் உள்ள உண்மை நிலவரத்தையும் அறிந்து கொள்ளாமல், மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

இதேபோன்றே அடுத்த தீர்மானமான பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக பிரகடனப்படுத்த வேண்டும் என்பதாகும். கடந்த வருடத்தில் இருந்தே விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினை தொடர்பாக சமாதான ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தத் தாம் தயாராக இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

"நாம் சமாதானத்திற்கும் தயார். போருக்கும் தயார். சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதை எதிரிதான் தீர்மானிக்க வேண்டும்: நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடத்த நாம் தயார்" இவ்வாறாகக் கடந்த வருட மாவீரர் தினச் செய்தியில் தலைவர் பிரபாகரன் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாகவே எடுத்துக் கூறியுள்ளார். இதே கருத்தையே புலிகள் தற்பொழுதும் கொண்டுள்ளனர் என்பதை அவர்களின் அண்மைக் காலப் பேச்சுகளும் தெளிவுபடுத்துவதாகவுள்ளன. இந்நிலையில், பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக புலிகளும் பிரகடனப்படுத்த வேண்டும் என மாநாட்டில் கலந்து கொண்டிருப்பவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது இனப்பிரச்சினையில் இவர்கள் கொண்டுள்ள 'ஆழ்ந்த அக்கறையை' வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

வெளிநாடுகளில், பண வசதிகளுடன் இருக்கின்றோம் என்பதற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் என்ற ரீதியில் மாநாடுகளைக் கூட்டுவதும், உண்மை நிலைக்கு புறம்பானதாக தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், ஒரு போதும் தமிழ் மக்களுக்கு நன்மை தரப் போவதில்லை. மாறாகத் தமிழ் மக்கள் பற்றி ஓர் பாதகமான நிலைமையையே சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்துவதாக அமையும். அத்தோடு, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே நாடி நிற்கும் சிறிலங்காவிற்கும் உதவி புரிந்ததாக அமையும்.

# தமிழகத்திலுள்ள இல. தமிழர்கள் தாமாகவே நாடு திரும்புவராம்

## -நெவில் கனகரத்தினா கூறுகின்றார்

[சென்னை]

இந்தியாவிலிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாகவே நாடு திரும்பும் காலம் வந்து விட்டது என்று இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் நெவில் கனகரத்தினா சென்னையில் பத்திரிகையாளருடன் பேசும்போது குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் ஏற்கனவே கப்பல் மூலம் திருக்கோணமலைக்கும், தலைமன்னாருக்கும் அனுப்பப்பட்டு வருவது தெரிந்ததே. இவ்வாறான திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் சுய விருப்பத்திற்கு முரணானது என்று தெரிவிக்கப்பட்டு வரும் அதேவேளை தமிழகத்திலுள்ள பலர் தாயகம் திரும்ப தயக்கம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே அண்மையில் சென்னை வந்திருந்த புதுடில்லியிலிருக்கும் இலங்கைக்கான தூதுவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளை மீளக் குடியமர்த்த சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது என்றும் இதனையடுத்து இந்தியாவின் தமிழகத்திலுள்ள அகதிகள் நாடு திரும்பும் நேரம் வந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

## வவுனியாவில்

# ஜனாதிபதி செயலகத்தின்" இடம் பெயர் சேவை

(கொழும்பு)

மே மாத இறுதியில் வவுனியாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி செயலக இடம் பெயர் சேவையை முன்னிட்டு ஏற்பாடுகள் யாவும் துரிதகதியில் நடைபெற்று வருவதாக தெரிய வருகின்றது.

இது ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின் ஒன்பதாவது அமர்வாகும். இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள வவுனியா, தமிழ் மகா வித்தியாலயம், காமினி மகா வித்தியாலயம், சைவப் பிரகாச வித்தியாசாலை, சி. சி. தமிழ் கலவன் பாடசாலை, றம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றின் மண்டபங்கள் மற்றும் கட்டடங்களின் திருத்த வேலைகளுக்கென ஒரு கோடியே பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கஊழியர்களுக்கான ஐந்து வருட கடன் திட்டம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான ஐந்து வருட சம்பள கடனுதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடு கட்டுவதற்கு அல்லது நிலம் வாங்குவதற்கு என்ற அடிப்படையில் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். ஓய்வூதிய வசதிகளுக்கு தகுதியுள்ள ஐந்து வருட சேவையைப்பூர்த்தி செய்த அரசாங்க ஊழியர்களே இந்தக்கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கணவன், மனைவி ஆகிய இருவரும் அரசாங்க சேவையில் இருந்தால் அவர்களில் ஒருவர் மாத்திரமே இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கான வருடாந்த வட்டி 7.2 சதவீதமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் திட்டத்தினால் நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் அரசாங்க ஊழியர்கள் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு- வாவியில் மீன்பிடிக்க பொலிசார் நிபந்தனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியின் கல்லடிப் பாலத்திலிருந்து புதுப்பாலம் வரையிலான பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீன்பிடிக்க விரும்பும் மீனவர்கள் மட்டக்களப்பு மீன்பிடி இலாகா ஆணையாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் வைத்திருக்கவேண்டுமெனவும், பிற்பகல் ஆறுமணிமுதல் காலை ஆறு மணிவரையுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும மட்டக்களப்பு பொலீசார் கூறியுள்ளனர்.

# தமிழ் மக்களின் துயர் தீர திருத்தல பாதயாத்திரை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் போரின் கொடுமையால் வாடும் தமிழீழ மக்களின் துயர்தீர இறையருள் வேண்டி இந்து சமயப்பேரவைதிருத்தல பாத யாத்திரை ஒன்றை 6-3-92 தொடக்கம் 18-3-92 வரை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது.

இது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது, ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் போர்க் கோலம் மாறி சுகவாழ்வு ஏற்பட திருத்தலங்கள் நோக்கி மேற்கொள்ளவுள்ள யாத்திரை இந்நாட்டில் புதிய யுகத்தை ஏற்படுத்தட்டும் எனத் தெரிவித்தார்.

# இலவச பால் மா

(குரும்பசிட்டி)

1990 ஆனி மாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒருவயதிற்கும், மூன்று வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளுக்கு மூன்று மாதங்களுக்கு இலவசமாகப் பால்மா வகைகளை வழங்கக் குரும்பசிட்டி சன்மார்க்கசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் வேண்டுகோளை ஏற்று இத்திட்டத்துக்கு யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பதினாறாயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது.

# கனகரத்தினம் ம. வி.-மானி. இந்து கிரிக்கெட் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி மானிப்பாய்இந்துக்கல்லூரிக்கும்கனகரத்தினம் வித்தியாலயத்திற்கும் இடையில் திங்கட்கிழமை 2 ஆம் திகதி மகாசிவராத்திரியன்று கனகரத்தினம்வித்தியாலயம் மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் வித்தியாலயம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வன் சர்வன் 38 ஓட்டங்களையும், செல்வன் திவான் 32 ஓட்டங்களையும் செல்வன் ஜெயகரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய செல்வன் திலக், செல்வன் தர்மன் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 192 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வன் ஜயஜீவன் 34 ஓட்டங்களையும் செல்வன் பிரபா 29 ஓட்டங்களையும், செல்வன் திலக், 19 ஓட்டங்களையும், செல்வன் சுதாகர் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

செல்வன் நாதன், செல்வன் பார்த்திபன், செல்வன் பாஸ்கரன், தலா 3,4,2 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

கனகரத்தினம்வித்தியாலயம் தனது இரண்டாவது இன்னிங்சில் 1 விக்கட் நஷ்டத்திற்கு 41 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் செல்வன் சர்வன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், செல்வன் பார்த்தீபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். திரு. என். ரவீந்திரனும் திரு. எஸ். அற்புதநாதனும் திறம்பட மத்தியஸ்தம் வகித்தனர். (42)

# வறுமை நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் ஆறாவது தொடர் வறுமை நிவாரண முத்திரையின் 10 ஆம் இலக்கப்புள்ளிக்குரிய பொருள்களை இம்மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று யாழ். மாவட்ட சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி எஸ். சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பதினோராம் புள்ளிக்குரிய பொருள்களை எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றார். (24)

## ஏற்புவலி காரணமாக குழந்தை பலி

(புங்குடுதீவு)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து கெற்பலிப் பகுதி பண்டிதர் குடியிருப்பில் தங்கியிருந்த குழந்தையொன்று ஏற்புவலி காரணமாய் உயிரிழந்துள்ளது. புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த அருள்ராஜா யுவித்ரா என்ற எட்டு மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. சில காலத்திற்கு முன்னர் தலைப்பகுதியில் இக்குழந்தைக்குசத்திரசிகிச்சைசெய்யப்பட்டதாகவும் அதன் காரணமாக ஏற்பட்ட ஏற்பினாலேயே இக் குழந்தை உயிரிழந்ததென்றும் கூறப்படுகிறது. (22)

அமெரிக்கா, பிரிட்டனுக்கு எதிராக

# சர்வ. நீதிமன்றில் லிபியா வழக்கு

# நெருக்குதலை கைவிட உத்தரவிடுக

(நியூயோர்க்)

லிபியாவுக்கு எதிரான பலாத்காரத்தையும் அச்சுறுத்தலையும் கைவிடுமாறு அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் உத்தரவிடுமாறு லிபியா சர்வதேச நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இந்த தகவலை ஐ நா. நீதிமன்ற அதிகாரி ஒருவர் ரோய்ரர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

1978 இல் இடம்பெற்ற பான் - அம் விமானக் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் என குற்றம்சாட்டப்பட்டுள்ள இரண்டு லிபியர்களை தம்மிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்காவும் பிரிட்டனும் வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

இது தொடர்பான இரு லிபியர்களும் நாடுகடத்தப் படமாட்டார்கள் என திட்டவட்டமாக லிபியா அறிவித்துள்ளது.

அவர்கள் இருவரையும் நாடு கடத்துமாறு பிரிட்டனும் அமெரிக்காவும் வற்புறுத்துவதை நிறுத்துமாறு கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நீ மன்றத்திற்கு லிபியா விடுத்த கோரிக்கையில், சிவில் விமானப் பாதுகாப்பு எதிரான சட்டவிரோத செயல்களை தடுக்கும், 1971 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட மொன்றியல் உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த வழக்கை விசாரணை செய்யும் படி கேட்டுக் கொண்டுள்ளது.

## வி.பு.மாணவர் இயக்க இலவச வகுப்புகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஆதரவில் அரியாலை சிறிபார்வதி வித்தியாலயத்தில் இலவச வகுப்புகள் இன்று ஆரம்பமாகின்றன.

இங்கு ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகள் நடைபெறும். இந்த வகுப்புகள் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் என மாணவர் இயக்க யாழ். கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## இனம் தெரியாத நபர்ஒருவர் வீதி விபத்தில் பலி

நேற்று முன்தினம் இரவு நீர்வேலி அத்தியார்இந்துக்கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற வீதிவிபத்தொன்றில் 28வயது மதிக்கத்தக்க ஆண்ஒருவர் மரணமடைந்துள்ளார். கறுப்பு நிறம், தலைமயிர்கறுப்பு,வாரி வலது பக்கமாக இழுக்கப்பட்டுள்ளது. உயரம் 5 அடி. சதுரக்கோடு போட்ட மண்ணிற பச்சை நிறம் கலந்துள்ள் சாரமும் சாம்பல் நிற நீளக்கை சேட்டும் அணிந்திருந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதே நாள் இரவு 2. 30 மணிக்கு இறந்துள்ளார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என தமிழீழ காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் சம்பளம் நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் முதல் சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து மேல் மாகாணத்துக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு மேல் மாகாணசபை இதுவரை சம்பளம் வழங்கி வந்தது. எனினும் இனிமேல் இவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தாம் கடமை புரிந்த பாடசாலைகளிலிருந்தே சம்பளத்தைப் பெறவேண்டுமெனவும், மேல்மாகாணசபை சம்பளம் வழங்குவதை ஜனவரி முதல் இடைநிறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் விடுத்த உத்தரவொன்றின் கீழேயே இந் நடவடிக்கைஎடுக்கப்படுவதாக மேலும் தெரியவந்துள்ளது.

### சாரணர்

பட்ட சாரணர்கள் கலந்து கொண்ட இவ் ஜம்போறியில் சாரணத் தோழர்களால் சாரணச் சகோதரர்களுக்காக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் இன்று பெரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எங்கள் பிரதேசத்தில் சாரணர் ஜம்போறியை நடாத்திக் கொண்டிருக்கிறோம். சிறிலங்கா அரசு எமது சுய கௌரவத்தை அவமதித்துள்ளது. கல்விக் கூடங்கள் உடைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாணவச் சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் கல்விச் சீரழிவும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

நாம் இந்த நல்ல நாளிலே சிங்கம் பொறிக்கப்பட்ட சின்னத்தை புறக்கணிப்பதன் மூலம் எமது சுய கௌரவத்தை நிலைநாட்டுவோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

### மீனவர்

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திடீரெனவந்த இரண்டு உலங்குவானூர்திகள் வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை பொற்பதி கடற்பிரதேசத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள்மீதுவேட்டுக்களைத் தீர்த்தன.

அச்சமயத்திலேயே கடற்றொழிலாளரான குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனைய கடற்றொழிலாளர்கள் கட்டுமரங்கள்,படகுகளில் இருந்து கடலில் குதித்து நீந்தியதினால் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள். (36)

### கண்ணி

பொருள்களை எடுத்து வருவதற்கு வசதியாக கீரிமலை - காங்கேசன்வீதியை அண்மித்த பகுதி யுத்த சூன்யப் பிரதேசமாக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த இரு நாட்களாக மேற்படி வீதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த அனைத்துக்கண்ணிவெடிகளும் அகற்றும்வேலைகள் ஆரம்பித்தன. கண்ணிவெடி அகற்றும் பணி நேற்று நிறைவடைந்து விட்டதால் நாளை மறுதினம் பரீட்சார்த்தமாக முதலாவது வாகனத் தொடர் மூலமாக இத்துறைமுகத்தில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மேஜர்

பெற்ற மோதல்களில் பங்கேற்றவர். மேலும், ஆனையிறவிலும் நடைபெற்ற பெரும் போரில் பங்குபற்றியவராவர்.

### நள்ளிரவு

னுத்துரை என்பவரின் வீட்டிற்குள் வீழ்ந்து வெடித்ததினால் அங்கு உறக்கத்திலிருந்த பொன்னுத்துரை வள்ளியம்மை (வயது 48), பொன்னுத்துரை சிவகுமார் (வயது 11) பொன்னுத்துரை சந்திரகுமார் (வயது 10) ஆகியோரும்,இறந்த வள்ளியம்மையின் பேரப்பிள்ளைகளான யோ. யோகரஞ்சி (வயது 12), யோ. ரஞ்சிதமலர் (வயது 4) ஆகியோர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். யோ. யோகேஸ்வரி(வயது 27) மகன் யோகேஸ்வரன் (வயது 5) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட இந்த எறிகணைத் தாக்குதல்களின் போது காரைநகர், ஊர்காவற்றுறை, மண்டைதீவுப் பகுதி இராணுவ நிலைகளிலிருந்து குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அப் பகுதிகளில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றன. இத்தாக்குதல்களினால் சில வீடுகளும் பலத்த சேதமடைந்தன. (ச, 20, க)

ரஞ்சன் கொலை தொடர்பாக

## புலிகள்மீது குற்றபத்திரிகை தாக்கல்செய்ய முயற்சி

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் ரஞ்சன் விஜயவர்த்தன பலியாகிய குண்டு வெடிப்பு, கூட்டுப்படை தலைமையலுவலக குண்டு வெடிப்பு என்பவற்றை திட்டமிட்டவர் என சிறிலங்கா அரசால் கருதப்படும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. பொட்டு அம்மானுக்கு எதிராக குற்றப் பத்திரிகைதாக்கல்செய்ய சிறிலங்கா பொலிசார் முயன்று வருகின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் சிறிலங்காவின் சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளை கேட்டுள்ளனர்.

இதே வேளை இச் சம்பவங்கள் தொடர்பாக ரவி, சுவேந்திரா ஆகியோர் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இரண்டு தனித்தனியான குற்றப் பத்திரங்கள்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## நிதி அமைச்சுக்குள்ளும் புலிகள் ஊடுருவலாம்

நிதியமைச்சுக்குள்ளும் புலிகளின்ஊடுருவல் இருப்பதனை தேசிய அபிமானத்தோடு நாம் தெரிவிக்க முயலவேண்டும். பெருந்தோட்டங்களை 22 கூறுகளாக்கி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பதன் மூலம் புலிகளுக்கும் தோட்டங்களை வாங்க அரசாங்கம் வழிசமைத்துக் கொடுக்கிறது. இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புலிகளிடம் இன்று நல்ல பணப்புழக்கம் உண்டு. அவர்கள் கப்பல்களை வாங்கியுள்ளார்கள். ஆயுதங்களை வாங்குகின்றார்கள் இவற்றை நாம் கருத்திற் கொள்வது அவசியம்

அமெரிக்க நிறுவனங்கள் இன்று கொழும்பு வந்துதோட்டப் பங்குகளை வாங்குகின்றனர்.அது அவர்களதுநாட்டிலே மதுபானத்திற்குசெலவழிக்கப்படும் பணத்திற்கு சமமானதாகும். 1,50,000 டாலர்களை கொண்டுவரும் வெளிநாட்டவர்களுக்கு இங்கு கைத்தொழில் பேட்டைகளை அமைக்க அரசாங்கம் வாய்ப்புகளை அளிக்கிறது என அவர் தெரிவித்தார்.

## உலக கிண்ண கிரிக்கட்; இந்தியா வெற்றி பெற்றது

நேற்று நடைபெற்ற ஐந்தாவது உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 43 ஒட்டங்களால்தோற்கடித்துள்ளது

இந்தியா 49 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 216 ஒட்டங்களை எடுத்தது. பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்களில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 173 ஒட்டங்களை மட்டுமே பெற்றது இவ் ஆட்டத்தின் சிறப்பு ஆட்டக்காரராக சக்தின் தெண்துல்கர் தெரிவு செய்யப்பட்டார்.

### சிறிலங்கா

உயர் மட்ட அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

போரினைத் தொடர்ந்து நடத்தப் படைவீரர்கள் தேவைப்படுகிறார்கள் புலிகளின் வசமிருக்கும் பகுதிகளை மீட்பதற்கு இந்தப்படை வீரர்கள் தேவைப்படுகிறார்கள்.

இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது.

### புலிகளின்

இவ் அதிரடித் தாக்குதல் மூன்று நிமிடங்கள் வரையுமே நீடித்தது. இத் திடீர் தாக்குதலின் போது 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். தாக்குதலின்போது மூன்று காவலரண்கள் புலிகளால் அழிக்கப்பட்டன,

மணலாற்றில் நடந்த இவ் மோதலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதப் படுத்தின.

### வன்னியில்

பார்த்த வெற்றியை அடையமுடியாது நடவடிக்கைகளைக் கைவிட்டு பின்வாங்கிச் சென்றுள்ளது. 'வன்னி விக்கிரம' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த மூன்றாவது இராணுவ நடவடிக்கையும் இராணுவத்திற்கு தோல்வியில் முடிந்துள்ளது.

பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் அப்பகுதியில் உள்ள தமிழ் பொதுமக்களின் நூற்றுக்கணக்கான வீடுகளை உடைத்து பொருள்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் 15க்கு மேற்பட்ட வீடுகளை தீயிட்டு எரித்துள்ளனர். ஈச்சம்குளம் பகுதியில் வினாசித்தம்பி, சிவஞானம் கனகசிங்கம், சுந்தரம் ஆகியோருடைய வீடுகளும் தவசியாகுளம் பகுதியில் பொன்னம்பலம் என்பவரது வீடும், கருவேப்பங்குளம் பகுதியில் நாகதாசன் என்பவரது வீடும், கட்டையாகுளம் பகுதியில் முத்து என்பவரது வீடும் எரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேவர்குளத்தில் 3 வீடுகளும் சாஸ்திரிகூளாங்குளத்தில் ஒரு வீடும் புதுக்குளத்தில் ஒரு வீடும் எரிக்கப்பட்டுள்ளன.

இந்த இராணுவ நடவடிக்கைகளால் பொதுமக்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டாம் திகதி நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் தவசியாகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றதையடுத்து பொது மக்கள் தத்தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### திரு. சபாபதி சுப்பிரமணியம்

தாவடி வடக்கைச் சேர்ந்த சபாபதி சுப்பிரமணியம் அவர்கள் காலமாகி விட்டார்.

இவர் மனோன்மணியின் அன்புக்கணவரும் சத்தியநாதன் (லண்டன்) (முன்னாள் லங்கா சிமேந்து லிமிட்டெட்) கமலநாதன் (சுவிஸ்) சிவநாதன் (ஆசிரியர்) கமலேஸ்வரி, கலாறஞ்சனி ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவநாதன் (தபால் அதிபர்) யசோதா (லண்டன்) பவதாரணி (சுவிஸ்) பிறேமானந்தி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (5-3-92) பி.ப. 2-00 மணியளவில் தாவடியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தாவடி வடக்கு ச. சிவநாதன்

கொக்குவில் (சி/4005) மருமகன்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.